ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 2017.06.06

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - மாச்சு 2017

### பொதுநோக்கு

கடந்த இரண்டு மாத காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கிற்கு மாறாக 2017 மாச்சில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 9.8 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) அதிகரித்தன. எனினும், 2017 மாச்சில் வர்த்தகப் பற்றாக்குறையானது 2016இன் தொடர்பான மாதத்துடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பு, இறக்குமதி செலவினத்தில் ஏற்பட்ட உயர்ந்த அதிகரிப்பினால் எதிரீடு செய்யப்பட்டதன் காரணமாக விரிவடைந்தது. பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்திநிலையம் அதன் ஓடுபாதையின் தரைச் செப்பனிடல் வேலைகளுக்காக மூடப்பட்டிருந்தமையின் காரணமாக, சுற்றுலா வருவாய்கள் முன்னைய மாதத்தினைப் போன்றே 2017 மாச்சிலும் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை தொழிலாளர் பணவலுப்பல்களும் 2017 மாச்சில் வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. நிதியியல் கணக்கில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் தொடர்ந்தும் தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தவேளையில் இம்மாத காலப்பகுதியில் ஏற்பட்ட சிறிதளவு தேறிய உட்பாய்ச்சலின் காரணமாக அரச பிணையங்கள் சந்தையில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் தேறிய வெளிப்பாய்ச்சலில் மாற்றமொன்று அவதானிக்கப்பட்டது. சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கு தொடர்ந்து வந்த மாதங்களில் மேலும் மேம்பட்டமைக்கு மேற்குறிப்பிட்ட உட்பாய்ச்சல்கள் தொடர்ந்தமையும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் பெறுகைகள் கிடைக்கப்பெற்றமையும் அரசிற்கான கூட்டுகடன்கள் கிடைக்கப்பெற்றமையும் காரணங்களாக அமைந்தன. இது வெளிநாட்டுத் துறை உறுதியடைவதற்கு உதவியது.

### ஏற்றுமதிச் செயலாற்றம்

2017 மாச்சில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2015 மாச்சிற்கு பின்னர் முதற்தடவையாக ஐ.அ.டொலர் ஒரு பில்லியனைக் கொண்ட சாதனை இலக்கினை விஞ்சி ஐ.அ.டொலர் 1,042 மில்லியனாக விளங்கி (ஆண்டிற்கு ஆண்டு) 9.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இவ்வதிகரிப்பிற்கு முக்கியமாக வேளாண்மை ஏற்றுமதிகளும் அதனைத் தொடர்ந்து கைத்தொழில் ஏற்றுமதிகளும் வழிவகுத்தன.

வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் தொடர்ந்து நான்காவது மாதமாக அதிகரித்து, 2017 மாச்சில் ஐ.அ.டொலர் 257 மில்லியனுக்கு 28.3 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. வேளாண்மை ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு தேயிலை, கடலுணவு மற்றும் வாசனைத்திரவியங்களில்

பதிவுசெய்யப்பட்ட மேம்பட்ட ஏற்றுமதிச் செயலாற்றம் பெருமளவிற்குப் பங்களித்தது. ஏற்றுமதி செய்யப்பட்ட அளவுகளில் வீழ்ச்சி காணப்பட்டபோதும், தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் பெறுமதி நியதிகளில் 18.6 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு விலைகளில் ஏற்பட்ட (ஆண்டிற்கு ஆண்டு) 22.9 சதவீதம் கொண்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். 2017 மாச்சில் கடலுணவு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 75.2 சதவீதத்தினால் அதிகரித்தமையானது மீன்பிடி மீதான தடைகள் அகற்றப்பட்டமையினைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியச் சந்தைக்கான கடலுணவு ஏற்றுமதிகளில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. மேலும், 2017 மாச்சில் வாசனைத் திரவியங்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 67.8 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காட்டியமைக்கு கராம்பு, கறுவா மற்றும் மிளகு என்பனவற்றின் அளவுகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைத் தொடர்ந்து அவற்றின் செயலாற்றம் மேம்பட்டமையே முக்கிய காரணமாகும். வேளாண்மை ஏற்றுமதிகளின் கீழ், தயாரிக்கப்படாத புகையிலை தவிர்ந்த அனைத்து துணைவகைகளும் இக்காலப்பகுதியில் அதிகரித்தன.

மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 75 சதவீதத்தினைப் பிரசன்னப்படுத்தும் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2017 மாச்சில் ஐ.அ.டொலர் 779 மில்லியனுக்கு 4.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு புடவைகள் மற்றும் ஆடைகள் ஏற்றுமதிகளிலிருந்தான உயர்ந்த வருவாய்கள் வழிவகுத்தன. முன்னைய இரண்டு மாத காலப்பகுதிகளிலும் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் வீழ்ச்சியொன்று பதிவுசெய்யப்பட்ட போதும் புடவைகள் மற்றும் ஆடைகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2017 மாச்சில் ஐ.அ.டொலர் 453 மில்லியனுக்கு 2.6 சதவீதத்தினால் அதிகரித்து ஐரோப்பிய ஒன்றிய சந்தையிலிருந்தான அதிகரித்த கேள்வியைப் பிரதிபலித்தது. மேலும் பொறிகள் மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் பெற்றோலிய உற்பத்திகள், அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள், இறப்பர் உற்பத்திகள் என்பனவும் மேம்பட்ட செயலாற்றத்தைக் காட்டின. எனினும் உந்தி இணைக்கப்பட்ட படகுகள் மற்றும் உல்லாச படகுகளின் ஏற்றுமதிகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் பதிவுசெய்யப்பட்ட போதும் போக்குவரத்துச் சாதனங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2017 மாச்சில் வீழ்ச்சியடைந்தமை 2016 மாச்சில் உல்லாசக் கப்பலின் ஏற்றுமதிகளினது தளத்தாக்கத்தை பிரதிபலிப்பதாக இருந்தது. மேலும் உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, மட்பாண்ட உற்பத்திகள், அச்சிடல் கைத்தொழில், உற்பத்திகள் என்பனவற்றிலிருந்தான வருவாய்கள் 2017 மாச்சில் வீழ்ச்சியடைந்தன.

ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2017இன் முதல் மூன்றுமாத காலப்பகுதியில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 2,774 மில்லியனாக விளங்கி, ஏற்றமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தமையின் காரணமாக 2017 மாச்சில் 1.3 சதவீதம் கொண்ட (ஆண்டிற்கு ஆண்டு) அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. தேயிலை, பொறிகள் மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் மற்றும் வாசனைத்திரவியங்களிலிருந்தான அதிகரித்த ஏற்றுமதி வருவாய்கள் இவ்வாண்டின் முதற்காலாண்டுப் பகுதியில் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு முக்கியமாகப் பங்களித்தன. எனினும் ஆய்வுக்குரிய காலப்பகுதியில் புடவைகள் மற்றும் ஆடைகள் உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன.

2017இன் முதல் மூன்று மாதகாலப்பகுதியில் இலங்கையின் வணிகப் பொருள் ஏற்றுமதிகளுக்கான முதன்மைச் சந்தைகளாக ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா, ஜேர்மனி மற்றும் இத்தாலி என்பன விளங்கி மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 57 சதவீதத்திற்கு வகைகூறின.

**அட்டவணை 1: ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (அ)**

| வகை | மார்ச்சு 2016 (ஆ) (ஐ.அ.டொ.மில்) | மார்ச்சு 2017 (ஐ.அ.டொ.மில்) | மாற்றம் (%) | சன-மார் 2016 (ஆ) (ஐ.அ.டொ.மில்) | சன-மார் 2017 (ஐ.அ.டொ.மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **744.1** | **779.2** | **4.7** | **2,165.6** | **2,106.6** | **(2.7)** |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 441.8 | 453.3 | 2.6 | 1,369.3 | 1,275.8 | (6.8) |
| இதில் ஆடைகள் | 415.6 | 424.8 | 2.2 | 1,294.0 | 1,201.0 | (7.2) |
| இறப்பர் உற்பத்திகள் | 71.6 | 76.7 | 7.1 | 203.2 | 199.5 | (1.8) |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 28.8 | 38.3 | 33.1 | 73.9 | 101.8 | 37.8 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 27.1 | 33.9 | 25.1 | 74.2 | 90.6 | 22.1 |
| உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை | 32.7 | 30.8 | (5.8) | 92.7 | 76.5 | (17.5) |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 35.7 | 23.8 | (33.2) | 47.0 | 38.9 | (17.3) |
| அடிப்படை உலோகம் மற்றும் பொருட்கள் | 6.5 | 11.8 | 80.1 | 15.5 | 27.6 | 77.5 |
| பிளாத்திக் மற்றும் உலோகப் பொருட்கள் | 7.5 | 7.7 | 2.0 | 19.0 | 17.4 | (8.7) |
| அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் | 3.6 | 2.7 | (25.0) | 6.0 | 10.0 | 67.4 |
| மண்பாண்ட உற்பத்திகள் | 4.2 | 3.3 | (22.9) | 9.5 | 8.2 | (14.0) |
| ஏனையவை | 84.5 | 97.0 | 14.7 | 255.2 | 260.3 | 2.0 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **200.7** | **257.4** | **28.3** | **562.2** | **655.9** | **16.7** |
| தேயிலை | 112.7 | 133.7 | 18.6 | 313.1 | 349.1 | 11.5 |
| தேங்காய் | 35.1 | 36.5 | 4.1 | 87.8 | 91.0 | 3.6 |
| வாசனைத்திரவியம் | 18.0 | 30.2 | 67.8 | 60.9 | 86.0 | 41.1 |
| கடலுணவு | 16.5 | 29.0 | 75.2 | 46.5 | 66.0 | 41.9 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 9.3 | 16.8 | 80.4 | 28.1 | 32.6 | 16.0 |
| இறப்பர் | 3.2 | 5.8 | 83.1 | 9.9 | 16.4 | 66.0 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 3.3 | 2.2 | (33.6) | 9.2 | 7.9 | (13.4) |
| மரக்கறிகள் | 2.6 | 3.3 | 27.1 | 6.8 | 6.9 | 2.0 |
| **3. கனிமங்கள் மற்றும் ஏனையவை** | **4.3** | **5.3** | **22.6** | **11.4** | **11.9** | **4.2** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **949.0** | **1,041.8** | **9.8** | **2,739.2** | **2,774.3** | **1.3** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தப்பட்டது.

(ஆ) தற்காலிகமானது.

## இறக்குமதிச் செயலாற்றம்

2017 மாச்சில் இறக்குமதி மீதான செலவினம் ஐ.அ.டொலர் 1,869 மில்லியனுக்கு (ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில்) 19.4 சதவீதத்தினால் அதிகரித்தது. இது 2014 ஒத்தோபருக்குப் பின்னர் ஒரு மாத காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட மிக உயர்ந்த இறக்குமதி வளர்ச்சியாகும். (ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில்) ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான மிகப்பெரிய பங்களிப்பு (76.9 சதவீதம்) இடைநிலைப்பொருட்களிலிருந்தும் அதனைத் தொடர்ந்து நுகர்வுப்பொருட்களிலிருந்தும் (15.9 சதவீதம்) முதலீட்டு பொருட்களிலிருந்தும் (6.4 சதவீதம்) கிடைத்தன.

2017 மாச்சில் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி மீது உறப்பட்ட செலவினம் ஐ.அ.டொலர் 948 மில்லியனுக்கு (ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில்) 32.6 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு எரிபொருள் இறக்குமதிகளே வழிவகுத்தன. எரிபொருள் மீதான இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொலர் 245 மில்லியனுக்கு 51.4 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு வெப்ப மற்றும் நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட வலு உருவாக்கத்திற்கான அதிகரித்த கேள்வியை ஈடுசெய்வதற்கான சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் மற்றும் நிலக்கரி இறக்குமதிகளில் மீது ஏற்பட்ட உயர்ந்த செலவினம் தூண்டுதலாக அமைந்தது. மேலும் இரும்பு மற்றும் உருக்கினை முக்கியமாகக் கொண்ட அடிப்படை உலோகங்கள், கோதுமை மற்றும் தங்கம் என்பனவற்றின் இறக்குமதி மீதான செலவினமும் இடைநிலைப்பொருட்களின் உயர்ந்த இறக்குமதி வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்களவிற்குப் பங்களித்தன. எனினும் 2017 மாச்சில் வளமாக்கி மற்றும் வேளாண்மை உள்ளீடுகளின் இறக்குமதிகள் 2016 மாச்சுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தன.

2017 மாச்சில் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி மீது உறப்பட்ட செலவினம் ஐ.அ.டொலர் 468 மில்லியனுக்கு (ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில்) 11.5 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு அரிசி, பாற்பண்ணை உற்பத்திகள் மற்றும் பழவர்க்கங்கள், உணவு மற்றும் குடிபானங்கள் போன்றவற்றின் இறக்குமதிகள் தூண்டுதலாக அமைந்தன. 2017 மாச்சில் அரிசி இறக்குமதிகள் 2016 மாச்சில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 0.9 மில்லியன் கொண்ட மிகச் சிறிய தொகையுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 53 மில்லியனினால் அதிகரித்தமைக்கு உள்நாட்டுச் சந்தையில் நிலவிய பற்றாக்குறையினைப் பூர்த்தி செய்வதற்காக அரிசி இறக்குமதியை மேற்கொள்வதற்கு எடுக்கப்பட்ட வழிமுறைகளே காரணமாகும். எனினும் உணவல்லா நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகள் மீது உறப்பட்ட செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு ஆடைகள் மற்றும் துணைப்பொருட்கள், ஊர்திகள், மருத்துவ மற்றும் மருந்தாக்கல்பொருட்கள், வீட்டலகுகள் மற்றும் தளபாடப்பொருட்கள் என்பனவற்றின் இறக்குமதிகள் மீது உறப்பட்ட செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும்.

2017 மாச்சில் முதலீட்டுப் பொருட்கள் மீது உறப்பட்ட இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொலர் 450 மில்லியனுக்கு (ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில்) 4.5 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு போக்குவரத்துச் சாதனங்களின் அதிகரித்த இறக்குமதியே முக்கிய காரணமாகும். போக்குவரத்துச் சாதனங்கள் மீது உறப்பட்ட இறக்குமதிச் செலவினம் 31.9 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு தாங்கிகள் மற்றும் பௌசர்கள் போன்ற வீதிவழி ஊர்திகளே வழிவகுத்தன. கட்டடப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்தமைக்கு இம்மாத காலப்பகுதியில் இரும்பு மற்றும் உருக்கின் இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும். எனினும் பொறிகள் மற்றும் கருவிகள் மீதான இறக்குமதிச் செலவினம் (ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில்) 3.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு தொலைத்தொடர்பூட்டல் கருவிகள் மற்றும் பொறிகள் மற்றும் கருவிகளின் உருதிப்பாகங்கள் என்பனவற்றின் இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும்.

ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2017 முதல் மூன்று மாத காலப்பகுதியில் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 5,279 மில்லியனாக விளங்கி 14.9 சதவீதம் (ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில்) கொண்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. இதற்கு எரிபொருள், தங்கம் மற்றும் அரிசி என்பனவற்றின் மீது உறப்பட்ட செலவினமே இக்காலப்பகுதியில் அதிகரித்தது. எனினும், ஊர்திகள் புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் மற்றும் பொறிகள் மற்றும் கருவிகளின் இறக்குமதிகள் இக்காலப்பகுதியில் வீழ்சசியடைந்தன.

2017 முதல் மூன்று காலப்பகுதியில் இந்தியா, சீனா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சிங்கப்பூர், யப்பான் முக்கிய இறக்குமதி மூலங்களாக விளங்கி 2017 முதல் மூன்று மாத காலப்பகுதியில் இறக்குமதிகளில் 59 சதவீதத்திற்கு வழிவகுத்தன.


### அட்டவணை 2 - இறக்குமதிகள் மீதான செலவினம் (அ)

| வகை | மார்ச் 2016 (ஆ) (ஐ.அ.டொ .மில்) | மார்ச் 2017 (ஐ.அ.டொ .மில்) | மாற்றம் (%) | சன-மார்ச் 2016 (ஆ) (ஐ.அ.டெ ா.மில்) | சன-மார்ச் 2017 (ஐ.அ.டெ ா.மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **420.1** | **468.5** | **11.5** | **1,109.2** | **1,170.5** | **5.5** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 158.3 | 213.5 | 34.9 | 399.5 | 505.2 | 26.5 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 1.9 | 53.6 | 2,765.6 | 5.0 | 103.4 | 1,972.4 |
| மரக்கறிகள் | 39.8 | 34.8 | (12.7) | 121.7 | 101.5 | (16.6) |
| பால் உற்பத்திகள் | 18.8 | 37.2 | 98.1 | 56.7 | 84.8 | 49.6 |
| சீனி மற்றும் சிற்றுண்டிகள் | 37.1 | 24.4 | (34.2) | 65.1 | 63.8 | (2.0) |
| கடலுணவு | 25.5 | 22.2 | (12.8) | 60.7 | 54.6 | (10.1) |
| பழவகைகள் | 6.3 | 9.4 | 47.7 | 17.6 | 22.0 | 24.8 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 28.8 | 31.8 | 10.5 | 72.8 | 75.2 | 3.3 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 261.8 | 255.0 | (2.6) | 709.7 | 665.3 | (6.3) |
| வாகனங்கள் | 80.2 | 74.5 | (7.0) | 231.6 | 191.9 | (17.2) |
| தொலைத்தொடர்பூட்டல் கருவிகள் | 29.9 | 37.1 | 23.8 | 63.3 | 79.8 | 26.1 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள | 151.7 | 143.4 | (5.5) | 414.8 | 393.6 | (5.1) |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **715.2** | **948.5** | **32.6** | **2,240.3** | **2,805.9** | **25.2** |
| எரிபொருள் | 162.1 | 245.3 | 51.4 | 485.7 | 882.1 | 81.6 |
| இதில் மசகெண்ணெய் | 25.7 | - | - | 96.0 | 125.6 | 30.8 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 112.1 | 206.8 | 84.5 | 313.8 | 625.3 | 99.3 |
| நிலக்கரி | 24.3 | 38.5 | 58.7 | 75.9 | 131.2 | 72.9 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 17.3 | 51.6 | 198.8 | 80.8 | 175.1 | 116.5 |
| இதில் தங்கம் | 7.1 | 40.7 | 470.7 | 47.9 | 151.5 | 216.4 |
| புடவைகள் மற்றும் ஆடைப் பொருட்கள் | 222.6 | 227.0 | 2.0 | 698.5 | 666.7 | (4.5) |
| அடிப்படை உலோகங்கள் | 21.8 | 61.9 | 184.2 | 78.9 | 152.7 | 93.6 |
| தாள் மற்றும் அட்டைப் பொருட்கள் மற்றும் அதன் பகுதிகள் | 43.1 | 41.4 | (3.9) | 117.3 | 106.4 | (9.3) |
| கோதுமை மற்றும் சோளம் | 1.3 | 38.8 | 2,969.2 | 54.5 | 82.6 | 51.7 |
| வேளாண்மை உள்ளீடுகள் | 18.7 | 15.4 | (17.7) | 47.4 | 44.7 | (5.8) |
| வளமாக்கி | 12.8 | 6.7 | (47.6) | 41.1 | 19.8 | (51.7) |
| தயாரிக்கப்படாத புகையிலை | 5.3 | 5.2 | (2.0) | 17.9 | 12.6 | (29.6) |
| ஏனையவை | 210.4 | 255.1 | 21.3 | 618.3 | 663.2 | 7.3 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **430.2** | **449.6** | **4.5** | **1,243.5** | **1,242.1** | **(0.1)** |
| பொறி மற்றும் கருவிகள் | 246.7 | 237.8 | (3.6) | 712.4 | 686.2 | (3.7) |
| கட்டடப் பொருட்கள் | 130.7 | 142.0 | 8.6 | 371.6 | 389.8 | 4.9 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 52.3 | 69.0 | 31.9 | 157.7 | 163.5 | 3.7 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 0.5 | 0.7 | 59.2 | 1.9 | 2.5 | 34.3 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **0.5** | **2.8** | **429.3** | **1.3** | **60.3** | **4,398.2** |
| **மொத்த இறக்குமதி** | **1,566.0** | **1,869.3** | **19.4** | **4,594.5** | **5,278.9** | **14.9** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
லங்கா ஐஓசி பிஎல்சி
இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது

**வரைபடம் 1: ஏற்றுமதி மற்றும் இறக்குமதிச் செயலாற்றம்**




மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
இலங்கைச் சுங்கம்

## வர்த்தக நிலுவை

2017 மாச்சில் வர்த்தக நிலுவையின் பற்றாக்குறை 2016 மாச்சின் ஐ.அ.டொலர் 617 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 828 மில்லியனுக்குக் கணிசமாக விரிவடைந்தது. 2017இன் முதல் மூன்று மாத காலப்பகுதிக்கான ஒன்றுசேர்ந்த வர்த்தகப் பற்றாக்குறை 2016இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,855 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 2,505 மில்லியனுக்குக் கணிசமாக அதிகரித்தது.

## சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்

2017 மாச்சில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் முன்னைய மாதத்தினைப் போன்றே தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தமைக்கு பண்டாரநாயக்கா பன்னாட்டு வானூர்திநிலையத்தின் ஓடுபாதையின் தரை செப்பனிடும் வேலைகளின் காரணமாக சில பறப்புக்கள் இரத்துச் செய்யப்பட்டமையும் சில பறப்புக்கள் மீள அட்டவணையிடப்பட்டமையும் காரணங்களாக அமைந்தன. 2017 மாச்சில் சுற்றுலாப்பயணிகளின் வருகைகள் 188,076 ஆக அமைந்து 2.5 சதவீதம் கொண்ட வீழ்ச்சியை (ஆண்டிற்கு ஆண்டு அடிப்படை) பதிவுசெய்ததெனினும், ஒன்றுசேர்ந்த அடிப்படையில் 2017இன் முதற்காற்பகுதியில் சுற்றுலாப்பயணிகளின் வருகைகள் 604,953 ஆக அமைந்து 2016இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 3.4 சதவீதம் கொண்ட அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. 2017இன் முதற்காலாண்டில் சுற்றுலாப்பயணிகளின் முதல் ஐந்து மூலங்களாக இந்தியா, சீனா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி மற்றும் பிரான்சு என்பன விளங்கி இலங்கையின் மொத்தச் சுற்றுலாப்பயணிகளின் வருகையில் 49.8 சதவீதத்திற்கு வகைகூறின. சுற்றுலாப்பயணிகளின் வருகையில் காணப்பட்ட அதேபோக்கினைப் பின்பற்றி 2017இல் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. இதற்கமைய இம்மாத காலப்பகுதியில் சுற்றுலாவிருந்தான[1] வருவாய்கள் ஐ.அ.டொலர் 322.7 மில்லியனாக விளங்கிய வேளையில் சுற்றுலாவிருந்தான ஒன்றுசேர்ந்த வருவாய்கள் முதற்காற்பகுதியில் ஐ.அ.டொலர் 1,037.9 மில்லியன் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தன.

---

[1] இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபையின், சராசரித் தங்கியிருக்கும் காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரிச் செலவு தொடர்பான 2017ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகள் பற்றிய அளவீடு பெருமளவிற்குத் தற்காலிகமானவையாகவும் திருத்தப்படக்கூடியனவாகவுமிருக்கும்.

**தொழிலாளர் பணவனுப்பல்கள்**

2017 மாச்சில் தொழிலாளர் பணவலுப்பல்களிலிருந்தான பெறுகைகள், 2016 மாச்சின் ஐ.அ.டொலர் 675.7 மில்லினிலிருந்து ஐ.அ.டொலர் 593.4 மில்லியனுக்கு (ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில்) 12.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. மேலும், 2017இன் முதற்காலாண்டில் தொழிலாளர் பணவலுப்பல்களிலிருந்தான ஒன்றுசேர்ந்த உட்பாய்ச்சல் 2016இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,733.7 மில்லியனுக்கு 3.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் நிலவும் மோசமான பொருளாதார மற்றும் புவிசார் அரசியல் நிலைமைகள் தொழிலாளர் பணவனுப்பல்களில் காணப்படும் வீழ்ச்சிக்குக் காரணமாக இருக்கக்கூடும்.

**நிதியியல் பாய்ச்சல்கள்**

ஆண்டின் முதற்காலாண்டுப் பகுதியில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டு முதலீடுகள், இரண்டாந்தரச் சந்தையிலிருந்தான ரூ.35.2 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சல்கள் மற்றும் முதலாந்தரச் சந்தைக்கான ஐ.அ.டொலர் 48.2 மில்லியன் கொண்ட உட்பாய்ச்சல்கள் என்பவற்றை உள்ளடக்கி ஐ.அ.டொலர் 83.4 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலைப் பதிவுசெய்தன. 2017 சனவரியிலும் பெப்புருவரியிலும் முறையே ஐ.அ.டொலர் 150.7 மில்லியனையும் ஐ.அ.டொலர் 255.9 மில்லியனையும் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்த அரச பிணையங்கள் சந்தையின் வெளிநாட்டு முதலீடுகள், 2017 மாச்சு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 1.1 மில்லியன் கொண்ட சிறிதளவு தேறிய உட்பாய்ச்சலைப் பதிவுசெய்தமையின் மூலம் போக்கில் மாற்றமொன்றினை எடுத்துக்காட்டியது. எனினும், ஒன்றுசேர்ந்த அடிப்படையில் அரச பிணையங்கள் சந்தை 2017இன் முதற்காலாண்டுப் பகுதியில் ஐ.அ.டொலர் 405.5 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைக் கொண்டிருந்தது. 2017இன் முதல் மூன்று மாதகாலப்பகுதியில் அரசிற்கான நீண்ட காலக் கடன்கள் 2016இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 42.3 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 28.9 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலைப் பதிவுசெய்தன.

**திரண்ட சென்மதி நிலுவை நிலைமை**

2017 இன் முதற்காலாண்டுப் பகுதிக்கான திரண்ட சென்மதி நிலுவை 2016இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 720.2 மில்லியன் கொண்ட பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 175.9 மில்லியன் கொண்ட பற்றாக்குறையினைப் பதிவுசெய்திருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

**பன்னாட்டு ஒதுக்குகளும் செலாவணி வீத அசைவுகளும்**

2017 மாச்சு இறுதியில் இலங்கையின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 5.1 பில்லியனாக விளங்கி 3.1 மாத இறக்குமதிகளுக்குச் சமனானதாகக் காணப்பட்ட வேளையில் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ஐ.அ.டொலர் 7.1 பில்லியனாக விளங்கி 4.2 மாத இறக்குமதிகளுக்குச் சமனானதாகக் காணப்பட்டது.

2016 இறுதியிலிருந்து 2017 யூன் 5 வரையான ஆண்டு காலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா 1.8 சதவீதத்தினால் மேலும் தேய்வடைந்தது. மேலும், குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் ரூபாவானது யூரோவிற்கெதிராக 8.1 சதவீதத்தினாலும் ஸ்டேர்லிங் பவுணுக்கெதிராக 6.2 சதவீதத்தினாலும் யப்பானிய யென்னுக்கெதிராக 6.7 சதவீதத்தினாலும் கனேடிய டொலருக்கெதிராக 1.6 சதவீதத்தினாலும் அவுஸ்திரேலிய டொலருக்கெதிராக 4.6 சதவீதத்தினாலும் இந்திய ரூபாவிற்கெதிராக 6.8 சதவீதத்தினாலும் தேய்வடைந்தது.

## அட்டவணை 3: வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் தொகுப்பு (அ)

| வகை | மாச்சு 2016 ஐ.அ.டொ. மில் | மாச்சு 2017 ஐ.அ.டொ .மில் | மாற்றம் (%) | சன -மாச் 2016 (ஆ) ஐ.அ.டொ. மில் | சன - மாச் 2017 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 949.0 (ஆ) | 1,041.8 | 9.8 | 2,739.2 (ஆ) | 2,774.3 | 1.3 |
| இறக்குமதிகள் | 1,566.0 | 1,869.3 | 19.4 | 4,594.5 | 5,278.9 | 14.9 |
| வர்த்தக மீதி | -617.0 (ஆ) | -827.5 | 34.1 | -1,855.3(ஆ) | -2,504.5 | 35.0 |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 330.8 (ஆ) | 322.7 | -2.5 | 1,003.3 (ஆ) | 1,037.9 | 3.4 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 675.7 | 593.4 | -12.2 | 1,793.4 | 1,733.7 | -3.3 |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (இ) | -2.4 | 34.8 | 1,549.0 | -12.5 | 83.4 | 767.0 |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (ஈ) | 121.8 (ஆ) | 171.7 | 40.9 | 266.1 (ஆ) | 610.6 | 129.5 |
| இதில், | | | | | | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 20.4 | 69.3 | 240.0 | 43.3 | 282.0 | 550.7 |
| நீண்ட காலக் கடன்கள் | 100.9 (ஆ) | 101.8 | 1.0 | 217.4 (ஆ | 326.0 | 50.0 |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

(அ) தற்காலிகமானது.

(ஆ) திருத்தப்பட்டது.

(இ) இரண்டாந்தரம் மற்றும் முதனிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஈ) அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல்கள், அரசாங்கத்திற்கான மூலதனம் மற்றும் நடைமுறை மாற்றல்கள், வெளிநாட்டு முதலீட்டாளர்களின் திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் என்பனவற்றின் விற்பனையிலிருந்தான உட்பாய்ச்சல்கள் மற்றும் அரசாங்கத்தின் கூட்டுக் கடன்கள் மற்றும் நீண்ட காலக் கடன்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.